ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2097/39 - 2018 නොවැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2018.11.16

*2097/39 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

மதுவரி அறிவித்தல்

**இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் குடிபானமல்லாத மதுசாரத்திற்கான ஒழுங்குவிதிகளைத் திருத்துதல்**

*காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 2 ஆம், 12 ஆம், 22 ஆம் மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ் நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிய 2059/ 32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 07/ 2018 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலான, குடிபானமல்லாத ஸ்பிரித்துக்களை இறக்குமதி செய்வதற்கான ஒழுங்குவிதிகளை இற்றைப்படுத்துவதற்கும் மற்றும் வசதிகளை ஏற்படுத்துக்கொடுக்கும் வகையிலும் திருத்தங்களை உள்ளடக்கி 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதிய 2075/ 23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 10/ 2018 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தல் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி பாராளுமன்த்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என இவ்வறிவித்தல் மூலம் இத்தால் அறியத்தருகின்றது.*

எஸ். ஆர். ஆட்டிகல,
செயலாளர்,
நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

*நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, நவெம்பர் 15.*

## ஒழுங்குவிதிகள்

1. 3 ஆம் பந்தியின் V ஆம் உப பிரிவில் "குடிபானமல்லாத மதுசார வகை" எனும் சொல் நீக்கப்பட்டு "மெதனோ 1. ஒல் ($CH_3$ - OH) மதுசாரம்" எனும் சொல் பதிலீடு செய்யப்படுவதுடன், அதில் "எனினும் குடிபானமல்லாத மதுசாரம்" எனும் சொல்லிற்குப் பதிலாக "எனினும் மெதனோ 1. ஒல் ($CH_3$ - OH) " எனும் சொல்லினை பதிலீடு செய்தல் மற்றும் "அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்" என்பதற்குப் பதிலாக "அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்" என திருத்தியமைத்தல்,

2. 3 ஆம் பந்தியின் V ஆம் உப பிரிவின் முதலாம் பந்தியின் முடிவில் கீழே குறிப்பிட்ட புதிய பந்தியை உட்புகுத்தல்,

"இவ்வறிவித்தலின் அட்டவணை I இல்" குறிப்பிட்ட ஏனைய குடிபானமல்லாத மதுசாரத்தின் பொருட்டு தேவையான சந்தர்ப்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட இயல்பு மாற்றி சேர்க்கையைத் தீர்மானிப்பதற்கு ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு",

3. 5 ஆம் பந்திக்கு உடனடுத்து இறுதியில் கீழே குறிப்பிட்ட 6 ஆம் பந்தியை புதிதாக உட்புகுத்தல்,

"6. மதுவரிப் பொறுப்பதிகாரி, மதுவரி அத்தியட்சகர், உதவி மதுவரி ஆணையாளர் ஆகியோரின் பரிந்துரையின் மீது உரிமத்தின் காலப்பகுதிக்கு ஏற்ப உரிமதாரர் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் குடிபானமல்லாத மதுசார அளவின் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட கடிதம் ஒன்று ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படுதல் வேண்டும்."

4. 6 ஆம் பந்தி, 7 ஆம் பந்தியாக மீள இலக்கமிடப்படுதல்,

5. அட்டவணை II இன் படிவம் 1 இன் 7 இல் உள்ள iii ஆம் விடயம் என பின்வரும் பிரிவை உட்புகுத்துதல்,

"iii. வருடாந்தம் விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் குடிபானமல்லாத மதுசார அளவு (வகையின் பிரகாரம் தனித்தனியாக)"

6. அட்டவணை II இன் படிவம் II இன் 6 ii இல் "(பெயரளவுப் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்)" எனும் வசனத்திற்கு உடனடுத்து "(எவ்வாறாயினும் நடைமுறைப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் பெயரளவுப் பட்டியலை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவின் பேரில் நீக்கலாம்.)" எனும் வாக்கியத்தை உட்புகுத்தல்,

7. அட்டவணை II இன் படிவம் II இன் 7 ஆம் இலக்கப் பிரிவு நீக்கப்பட்டு, பின்வரும் புதிய பிரிவினை உட்புகுத்துதல் "7. ஒவ்வொரு விண்ணப்பமும் உரிய மதுவரிப் பொறுப்பதிகாரியின் பரிந்துரையுடன் மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு நேரடியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்."

8. அட்டவணை III இன் படிவம் I இலுள்ள 1, 2 இல் "விற்பனை" எனும் சொல்லிற்கு பதிலாக "விற்றல்" எனும் சொல்லை உட்புகுத்தல்.

9. அட்டவணை IV இன் படிவம் I இன் 7 ஆம் இலக்க நிபந்தனைக்கு உடனடுத்து கீழே குறிப்பிட்ட நிபந்தனையை உள்ளடக்குதல், "அக்காலத்திற்குரிய மதுவரி அறிவித்தல் நிபந்தனைகளும் உரிம நிபந்தனைகளும் மீறப்படுமிடத்து மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 56 அல்லது 48 ஆம் பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்".

10. அட்டவணை IV இன் படிவம் II இன் தலைப்பில் "அதிகாரமளிக்கப்பட்ட விற்பனையாளர்களின் பொருட்டு" எனும் சொற்களை நீக்குதல்,

11. அட்டவணை IV இன் படிவம் II இன் 7 ஆம் நிபந்தனையின் முடிவில் கீழே குறிப்பிட்ட புதிய நிபந்தனையை உள்ளடக்குதல், "அக்காலத்திற்குரிய மதுவரி அறிவித்தல் நிபந்தனைகளும் உரிம நிபந்தனைகளும் மீறப்படுமிடத்து மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 56 அல்லது 48 ஆம் பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்",

12. அட்டவணை IV இன் படிவம் II இன் தலைப்பு நீக்கப்பட்டு கீழே குறிப்பிட்ட புதிய தலைப்பை உள்ளடக்குதல், "குடிபானமல்லாத மதுசாரத்தைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தலுக்கான உரிமம்",

13. அட்டவணை IV இன் படிவம் III இன் 1 ஆம் அட்டவணையில் காட்டப்பட்ட கீழே குறிப்பிட்ட சொற்களை நீக்குதல், "(மொத்த/சில்லறை)", "திறந்திருக்கும், மூடியிருக்கும் நேரங்கள்" மற்றும் "(களஞ்சியப்படுத்தல்/சில்லறை விற்பனை)" எனும் சொற்றொடரை உட்புகுத்தல்,

14. அட்டவணை IV இன் படிவம் III இன் 6 ஆம் அட்டவணையில் (i) இல் குறிப்பிடப்பட்ட "குடிபானமல்லாத மதுசாரத்தை மொத்தமாக" எனும் சொற்றொடரில் "மொத்தமாக" எனும் சொல்லை நீக்கி "களஞ்சியப்படுத்தல்" எனும் சொல்லை உட்புகுத்தல்,

15. அட்டவணை IV இன் படிவம் III இன் 6 ஆம் அட்டவணையில் "உரிமம் வழங்கும் அதிகாரி" எனும் சொல்லை நீக்கி "மதுவரி ஆணையாளர் நாயகம்" எனும் சொல்லை உட்புகுத்துதல்,

16. அட்டவணை IV இன் படிவம் III இன் நிபந்தனை இல. 1 இல் "மொத்தம்/சில்லறை" எனும் சொற்கள் நீக்கப்பட்டு "களஞ்சியப்படுத்தல் மற்றும் சில்லறை விற்பனை பொருட்டு" எனும் சொற்களை உட்புகுத்தல்,

17. அட்டவணை IV இன் படிவம் III இன் நிபந்தனை இல. 3 இல் "குடிபானமல்லாத மதுசாரத்தின் சகல மொத்த" எனும் சொல் நீக்கப்பட்டு "குடிபானமல்லாத மதுசாரத்தின் ஒவ்வொரு களஞ்சியப்படுத்துநரும்" எனும் சொல்லை உட்புகுத்தல்,

18. அட்டவணை IV இன் படிவம் III இன் நிபந்தனை இல. 5 இல் "4. 5 கி.கி" எனும் சொல் நீக்கப்பட்டு "7. 5 கி. கி." எனும் சொல்லை உட்புகுத்தல் மற்றும்,

19. அட்டவணை IV இன் படிவம் III இன் நிபந்தனை இல. 6 இல் "600 கி. கி." எனும் சொல் நீக்கப்பட்டு "1000 கி. கி." எனும் சொல்லை உட்புகுத்துதல்,

20. அட்டவணை IV இன் படிவம் IV இன் 1 ஆம் அட்டவணையில் "உரிமம் பெற்ற" எனும் சொல்லை நீக்குதல்,

21. அட்டவணை VI இன் படிவம் II இல் "கொழும்பு" எனும் சொல்லை நீக்கி "ராஜகிரிய" எனும் சொல்லை உள்ளடக்குதல் மற்றும் "அதிகாரம் பெற்ற சுங்க உத்தியோகத்தர்" எனும் சொல்லிற்கு உடனடுத்து "அதிகாரம் பெற்ற முதலீட்டுச் சபை உத்தியோகத்தர்" என்பதைச் சேர்த்து திருத்தஞ் செய்தல்.

11- 1401

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.